# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

ஆகத்து 2019

திபி 2050 . மலர் 1 . இதழ் 5



## நாம் தமிழர் கட்சி

# பதிப்புரை

இம்மாத இதழ் வேலூர் தேர்தல் சிறப்பு இதழாக வருகிறது.

நம் வேலூர் பரப்புரை மிகவும் வெற்றிகரமாக அமைந்திருந்தது. பத்திரிக்கைகளிலும் தொலைக்காட்சிகளிலும் சிறப்பிடமும் பெற்றது. கள நிலவரம் அறியவும் ஆராயவும் முடுக்குவதாக அமைந்தது.

களத்தில் பார்க்கும்போது இந்த 50 ஆண்டுகால திராவிட கட்சிகளின் வரலாற்றில் மக்கள் எவ்வளவு சுரண்டடப்பட்டிருக்கிறார்கள் என அறிய முடிந்தது மக்கள் . .மாற்றத்தை எதிர்நோக்கியிருப்பதையும் உணர முடிந்தது .விடியலுக்கான நேரம் தூரமில்லை

வெல்லப்போறான் விவசாயி !

ஆசிரியர் குழு

## இவ்விதழில்


1. வேலூர் பரப்புரை சிறப்புக் கட்டுரை
2. வேலூர் முடிவுகள்
3. மக்கள் களம்


"எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது."

- தலைவர் பிரபாகரன்

தகவல் தொழில்நுட்ப பணியாளர் பிரிவு சார்பாக வேலூர் நாடாளுமன்ற தேர்தலுக்கு பரப்புரை பயணம் செல்ல நமது தலைமை குழுவில் முடிவு செய்யப்பட்டது.

நமது பிரிவின் தலைமை குழு நன்றாக திட்டமிட நாங்கள் ஏறத்தாழ 19 நபர்கள் பயணத்தை தொடர்வதாக திட்டமிடப்பட்டு ஆரம்பித்தோம். முதல் நாள் காலை 5 மணி அளவில் பயணத்திட்டம் தொடங்கியது. ஒவ்வொரு குழுவாக ஒரு புள்ளியில் வந்து இணைந்து கொண்டோம்.காலை சிற்றுண்டி முடித்து அங்கிருந்து கிளம்ப ஆயத்தமானோம். முதல் கட்டமாக வேலூர் பகுதியில் நாங்கள் பரப்புரை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பின்பு திடீரென வந்த தகவலின் அடிப்படையில் வேட்பாளர் தீபலட்சுமி அவர்களின் ஊரிலும் அதை சுற்றியுள்ள கிராமத்திலும் பரப்புரை செய்ய திட்டமிடப்பட்டு இருந்ததால் நாமும் அதில் இணைந்து கொள்வதாக திட்டத்தை மாற்றி மீண்டும் ஒரு

"முயற்சி என்பது விதை போல அதை விதைத்து கொண்டே இரு முளைத்தால் மரம் இல்லையேல் மண்ணுக்கு உரம்"





"கொள்கையையும் தத்துவத்தையும் பின்பற்றுகிறவனுக்கு கடும் சூழலும் பஞ்சு மெத்தைதான் என்பது போல"

நீள் பயணத்தை மேற்கொண்டு வேலூரிலிருந்து வாணியம்பாடி வழி பயணத்தை நீட்டிப்பு செய்து அம்பலூர் போய் சேர்ந்தோம்.

அந்த தேசிய நெடுஞ்சாலையில் பல அரசியல் கதைகளோடு பேசி பேசி தீராது உத்வேகத்தோடு பயணித்தோம்.

தற்செயலாக வாணியம்பாடி தொகுதி கொள்கை பரப்புச் செயலாளர் தரணி அவர்களை சந்திக்க நேர்ந்தது. நமது குழுவின் மேல் சட்டையை (விவசாயி சின்னம்) பார்த்தவுடன் எங்களை கண்டு கொண்டார். அவர் வழிகாட்டுதலின்படி வேட்பாளர் வீட்டினை சென்றடைந்தோம்.
பெங்களூரில் இருந்து வந்த இரண்டு உறவுகள் (குமார் & மதன்) நம்முடன் இணைந்தார்கள். வீட்டை அடைந்த உடன் அங்கு வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் அண்ணன் எழில் இராவணன் அவர்கள் நம்மை வரவேற்றார்கள் அறிமுகமாகிக் கொண்டோம். மகளிர் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளரும் ஈரோடு நாடாளுமன்ற தொகுதி வேட்பாளரும் பேச்சு புலியுமான அக்கா சீதாலட்சுமி அவர்களும் பரப்புரை செய்ய தயாராக இருந்தார்கள்.

வேட்பாளர் தீபலட்சுமி நம்மை வரவேற்றார்கள். குறைந்த நேரத்தில் நமது குழுவின் மேல்சட்டையை(டி-சர்ட்-ஐ) அணிந்து கொண்டு நாமும் பரப்புரைக்கு தயாரானோம்.
முதல் கட்டமாக ஒரு கிராமத்தில் மேளதாளங்களுடன் பரப்புரை ஆரம்பித்தது.

வீடு வீடாக இறங்கினோம் துண்டறிக்கைகளை ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு மனிதரிடமும் தேடித்தேடி கொள்கைகளை தெளிவு படுத்தி விநியோகம் செய்தோம். அந்த மக்களும் எங்களை அன்போடு வரவேற்றார்கள்.

படித்தவர்கள் வாக்கு கேட்டு வருவது முதல் முறையாக கூட இருக்கலாம். அன்றைய திட்டமிடல் படி அம்பலூர் அருகே வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மலைப்பகுதியை சுற்றி உள்ள கிராமங்களில் பரப்புரை தொடர்ந்தது. மலைப்பாதை வழியாக மல்லங்கொண்டா என்ற இடத்திலும் அதற்கடுத்த ஒரு ஊரிலும் மதிய உணவு ஏற்பாடு செய்யபட்டது. நாம் தீவிரமாக பரப்புரை மேற்கொண்டு வரும் தருவாயில் ஆளுங்கட்சி பிரமுகர்கள் பணம் கொடுப்பதற்காக தவித்துக் கொண்டிருந்தார்கள். நம்மைப் பார்த்ததும் அவர்களின் திட்டத்தில் தாமதம் ஏற்பட நாங்களும் அங்கு இருந்து பரப்புரை முடித்து கிளம்ப தயாரானோம்.

வாணியம்பாடி தொகுதி தலைவர் மற்றும் வேட்பாளர் தீபலட்சுமி அவர்களின் தாய் மாமாவான ஐயா திரு.தேவேந்திரன் அவர்கள் ஒவ்வொருவரிடமும் கிட்டத்தட்ட சராசரியாக 5 லிருந்து 10 நிமிடங்கள் பேசி வாக்கு சேகரித்தார். குறிப்பாக திராவிட கட்சிகளின் பித்தலாட்டதையும் அவர்களால் நமக்கு ஏற்பட்ட சீரழிவையும், ஏமாற்றங்களையும், கொள்ளை அடித்து கோடி கோடியாக பணம் குவித்ததை பற்றியும் தனக்கே உரிய பாணியில் கிழித்து தொங்கவிட்டு கொண்டிருந்தார். இவர்களுக்கு மாற்றாக நாம் என்ன திட்டத்தை முன்வைக்கிறோம் என்பதையும் சேர்த்து மக்களிடம் எடுத்து கூறி வாக்கு சேகரித்தார்.

அதை தொடர்ந்து ஒரு ஊரில் மலை கிராமத்தினன் நடுவே பரப்புரை வாகனம் நின்றது. அக்கா சீதாலட்சுமி அவர்கள் ஒலிவாங்கியில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது தான் ஆளும் கட்சி மாநாடு வாணியம்பாடி சந்தையில் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தெரியவந்தது. அதன் பொருட்டு நாங்கள் சென்ற அந்த கிராமத்தில் ஒரு லாரியில் மக்களை ஆடு மாடு போன்று கூட்டம் கூட்டமாக 100க்கும் 200க்கும் 500க்கும் பாரம் ஏற்றும் லாரியில் மனிதர்களை வைத்து ஆடு மாடுகளை விட கேவலமான முறையில் நடத்தப்பட்டு அந்த மாநாட்டுக்கு செல்வதற்காக பணம் கொடுத்து தயார் நிலையில் இருந்தார்கள்.

நாமும் பரப்புரை செய்வதற்கு அந்த சூழலை சரியாக பயன்படுத்திக் கொண்டோம். அக்கா சீதாலட்சுமி பொங்கி எழுந்தார்கள் இப்படி ஆடு மாடு போன்று உங்களை இழுத்துச் செல்கிறார்கள். எங்களுக்கு மனம் வேதனை அளிக்கிறது என்பதை தொடர்ந்து பதிவு செய்தார்கள்.

பின்பு மதிய உணவு உண்டோம். நமது குழுவின் சார்பாக அக்கா தீபலட்சுமியிடம் நமது முதற்கட்ட நிதிப் பங்களிப்பை கையளித்தோம். மாலையில் வாணியம்பாடி சந்தையில் நமக்கு தெருமுனை பரப்புரை கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆளும் கட்சி கூட்டணி வேட்பாளர் ஏ.சி சண்முகம் அவர்களை ஆதரித்து நடக்கவிருக்கும் மாநாட்டிற்கு அருகில்தான் வாணியம்பாடி சந்தை இருந்தது.

அந்த கூட்டத்தின் நடுவே நம் வாகனங்களும் கிழித்து உள்ளே பயணிக்க என்னடா இவர்கள், நாம மாநாட்டை காசு கொடுத்து கூட்டி கொண்டு இருக்கிறோம் இவர்கள் தன்னெழுச்சியாக இப்படி ஒரு புலிக்கொடியை பறக்கவிட்டு கண்முன்னே பரப்புரை செய்து கொண்டிருக்கிறார்களே என்று பார்த்து வியந்தனர் ஆளுங்கட்சி பிரமுகர்கள்.

வாணியம்பாடி சந்தையில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் ஒருபுறம் நடைபெற்றது. நாங்கள் துண்டறிக்கை கையில் வாங்கிக் கொண்டு கிட்டத்தட்ட 19 பேரும் ஒவ்வொரு மூலையில் ஒவ்வொரு கடையிலும், வியாபாரியிடமும் வாக்குகளை சேகரித்தோம். தானியங்கி (ஆட்டோ) ஓட்டுநர்கள் எங்களை அருமையாக வரவேற்றார்கள். அவர்களிடம் நமது கொள்கைகளை கூறினோம். அவர்களும் கட்சியில் எவ்வாறு இணைவது என்பது பற்றியும் எங்களிடம் விசாரித்தார்கள். நாங்களும் அவர்களை தெளிவுபடுத்தி பின்பு அங்கிருந்து விடை பெற்றோம். பெங்களூரில் இருந்து வந்த உறவுகள் இருவருமே (குமார் மற்றும் மதன்) குறிப்பாக ஆட்டோ ஓட்டுனர்களிடமே சென்று வாக்கு சேகரித்தார்கள். ஆட்டோ ஓட்டுனர்களும் நமக்கு ஆதரவை வழங்கினார்கள்.

பின்பு 6 மணி அளவில் நாங்கள் பொதுக்கூட்ட மேடைக்கு சென்றோம். அப்பொழுதுதான் வாணியம்பாடி தொகுதி கொள்கை பரப்புச் செயலாளர் தரணி உரையாற்றிக் கொண்டிருந்தார். அவருக்கு பின் அக்கா சீதாலட்சுமி உரையாற்றினார்கள். ஆனால் பகல் முழுவதும் பரப்புரை வாகனத்தில்




நின்றுகொண்டே உரையாற்றி குரல் வளம் பாதிக்கப்பட்டு இருந்தது அக்காவுக்கு. உடல் நிலையை பொருட்படுத்தாமல் அனைத்து பிரச்சினைகளை முன்னிறுத்தி பேசினார்கள். கிட்டத்தட்ட ஒரு 15 நிமிடங்கள் மீண்டும் பேசி முடித்து அந்த கூட்டத்தை நிறைவு செய்தார். கரவொலி விண்ணை பிளந்தது.

தொடர்ந்து நமது தொழில்நுட்ப பணியாளர்கள் சார்பில் அண்ணன் ராஜா ராம் அவர்கள் பேச, மிகவும் எதிர்பார்ப்போடு நாங்கள் கவனித்துக் கொண்டிருந்தோம். பல நாசகார திட்டங்களை எச்சரித்து பேசினார். தேசிய புலனாய்வு முகமை மசோதா (NIA) பற்றியும் அது எவ்வளவு ஆபத்தான கொடுஞ் சட்டம் என்பதை அங்குள்ள இஸ்லாமிய மக்களுக்கு தெரியப்படுத்தினார். சென்னையில் பல நிறுவனங்களில் வேலை பார்த்து கொண்டே எங்கள் தத்துவத்திற்காக இந்த களத்தில் நாங்கள் இன்று வாக்கு சேகரிக்க வந்து இருக்கிறோம் என்றார். உண்மையில் ஒரு கணம் மெய்சிலிர்த்தது. தனது உரையை முடித்துக் கொண்டு கீழே இறங்கினார். நமது குழுவினர் அனைவரும் பாராட்டினோம்.

அன்று சிறப்பு பேச்சாளராக இளைஞர் பாசறை மாநில ஒருங்கிணைப்பாளர் துரைமுருகன் அவர்களும், கல்வியாளர் ஹீமாயுன் அவர்களும், அண்ணன் சரவணன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

சரவணன் பல செய்திகளை சொல்லிப் பேசினார். அவர் பேசியதும் அண்ணன் துரைமுருகன் பேச ஆரம்பித்தார். பெரும்பாலும் மேடையில் ஒலிவாங்கியை தொட்டவுடன் நகைச்சுவையோடு தான் தொடங்குவார். எடுத்தவுடனே "எங்க ஊரு திருநெல்வேலி பக்கம் மேலப்பாளையம் சந்தை பிரபலம். ஆடு மாடு வாங்கிட்டு பெரிய லாரிலயும், சரக்கு ஆட்டோலயும் ஏத்தி கொண்டு போவார்கள். அதே மாதிரிதான் இங்கு கொடுமை நடக்கிறது" என்று சொல்லும் போதே மக்களை அடைத்து வந்த லாரி எங்கள் தெருமுனை பிரச்சாரத்திற்கு முன்பாகவே கடந்து

சென்றது. அவர் பேசுவதற்கும் அந்த லாரி கடந்து செல்வதற்கும் சரியான தருணமாக இருந்தது.

பின்பு கல்வியாளர் அண்ணன் ஹிமாயுன் அவர்கள் பேசினார்கள். வாணியம்பாடி சந்தை தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தை பொறுத்தமட்டில் அண்ணன் ஹிமாயுன் சுருக்கமாகப் பேசி முடித்துக் கொண்டார். பின்பு அதற்கு அடுத்த தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் ஜாபரபாத் என்ற இடத்தில் நடைபெறுவதாக தெரியப்படுத்தப்பட்டது.

ஜாபரபாத் மேடையில் மழலையர் பாசறை ஒருங்கிணைப்பாளர் தம்பி முகிலன் பேசினார். தெள்ளத் தெளிவான உச்சரிப்பும் தமிழ் நடையும் சேர்ந்து விளையாடியது.

அக்கா சீதாலட்சுமி, துரைமுருகன், தொடர்ந்து அண்ணன் வினோத் அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். அவர் பேசும்போது "நான் தெலுங்கர் தான் ஆனால் தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி மக்களுக்காக களத்தில் தொடர்ந்து நிற்கும் நாம் தமிழர் கட்சியை ஏற்று பயணிக்கிறேன்" என்றார்.

பாஜக சார்பில் ஒரு உளவுத்துறையும் அனுப்பப்பட்டு இருந்தது. அந்த உளவுத்துறை நபர் நம்மிடமே வந்து முகிலனை பற்றி விசாரித்தார். துரைமுருகன் உரையாற்றி முடித்த பின் இரு சக்கர வாகனத்தில் கிளம்பிவிட்டார்.

அதன்பின் அண்ணன் ஹிமாயுன் பேச ஆரம்பித்தார் அவர் பேசிய ஒரிரு நிமிடங்களில் அருகில் இருந்த பள்ளிவாசலில் தொழுகை ஆரம்பித்தது. அண்ணன் பேச்சை நிறுத்திக் கொண்டார். தொழுகை முடிய ஒரு ஐந்து நிமிடங்கள் ஆனது மறுபடியும் ஒலிவாங்கியை தொட்டு பேச ஆரம்பித்தார்.

இஸ்லாமிய மக்களின் மேல் இழைக்கப்படும் அநீதி பற்றியும், அவர்கள் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டியும் பேருரையாற்றினார்.

"நீங்கள் இம்மையில் தவறு செய்யலாம் ஆனால் மறுமையில் இறைவனிடம் அதற்கு பதில் கூறியே ஆக வேண்டும்" நானும் ஐந்து முறை தொழுகிறேன். நானும் ஐந்து முறை தொழுகிறேன். மார்க்கத்தை பின்பற்றுகிறேன். ஆனால் நான் தெளிவாகச் சொல்கிறேன். இங்கு

இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றி தவறு செய்கிறவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை அல்லாஹ் ஒரு போதும் மன்னிக்க மாட்டான் என்பதை குறிப்பிட்டு பேசி முடித்தார். அந்த உரை அவர் வரலாற்றில் மறக்கமுடியாத உரையாக எழுதப்படும்.

கூட்டம் முடிந்தது. நமது பிரிவின் சார்பில் ஒரு நாள் பயணத்திட்டத்தில் வந்த அண்ணன் சரவணன், விக்னேஷ், சங்கரி மற்றும் ராஜாராம், நளன் ஆகியோரும் கிளம்ப ஆயத்தமானார்கள்.

வேட்பாளர் அவர்களிடம் நமது பொருளாளர் சஞ்சய் அவர்கள் இரண்டாவது கட்டமாக தொகையை அளித்தார்கள்.

அதிமுக சார்பில் நடக்கும் மாநாட்டிற்காக அங்கு எந்த பகுதியிலும் தங்கும் அறைகள் கிடைக்காத காரணத்தால், அன்றிரவு தலைவர் தேவேந்திரன் அவர்களின் வீட்டின் மாடியில் தங்குவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரவு உணவை முடித்து அந்த வீட்டின் மாடியில் நாங்கள் ஓய்வெடுத்தோம் அப்போது, அந்த நாளில் முழுமையாக



மேற்கொள்ளப்பட்ட பரப்புரை பற்றி விவாதித்தோம்,

அந்த மாடியே துணியினால் நிழல் வேயப்பட்டு அதில் தேங்காய் நார்கள் உரிக்கப்பட்ட கூந்தல்களும், தேங்காய் கழிவுகளும் ஒரு மூலையில் கொட்டி வைக்கப்பட்டிருந்தது.

கொள்கையையும் தத்துவத்தையும் பின்பற்றுகிறவனுக்கு கடும் சூழலும் பஞ்சு மெத்தைதான் என்பது போல,

காலையில் எழுந்து குளித்து முடித்து விட்டு கிளம்பினோம் பரப்புரை தயாரானது அன்று முழுவதும் வாணியம்பாடி நகர பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டது.



நம்மோடு இரண்டாம் நாள் பயணதிட்டத்தில் கலந்துகொண்ட அறிவரன்,பாலா மற்றும் இளவன் மூவரும் வந்து நம்முடன் இணைந்து கொண்டார்கள்.

வாணியம்பாடி சந்தையில் உள்ள பூங்கா ஒன்றில் காலை உணவு முடித்து

வாணியம்பாடி புதுநகர் பகுதியில் உள்ள மலைப்பகுதியில் நாங்கள் பிரச்சாரம் மேற்கொண்டோம். அந்த மலைப் பகுதியில் காணப்பட்ட பல இடங்களில் வாழும் மக்கள் ஏழ்மையோடு இருக்கிறார்கள்.

60 ஆண்டுகால திராவிட ஆட்சி எந்த மாற்றத்தையும் அவர்கள் வாழ்வில் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

அண்ணன் மதுசூதன் அவர்கள் "என்னப்பா இது வரைக்கும் களமாடியதில் நிறைவில்லை இனிமேல் தான் தீவிரமாக களப்பணி செய்யனும்னு" சொல்லி எங்களை உற்சாகமூட்டி கொண்டே இருந்தார்கள்.

நாம் களமாடும் தெருக்களில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் பரப்புரை செய்தார்கள். குறிப்பாக சில அதிமுக திமுக நிர்வாகிகளிடமே நாம் துண்டறிக்கைகள் கொடுத்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. பல வீடுகளில் நின்று நிதானமாக வாக்கு சேகரிக்க அவர்களும் நம்மிடம் பேசுவதற்கு ஆவலாக இருந்தார்கள். விவாதித்தார்கள்.

அந்த பயணம் முழுவதுமே நமக்கு மிகப்பெரும் அனுபவமாக இருந்தது. நகர்ப்பகுதிகளில் முக்கியமான சாலைகளில் பரப்புரை மேற்கொண்டு தொடர்ந்தது.

நாங்கள் வீடு வீடாகச் சென்று துண்டறிக்கைகள் கொடுத்தோம்.

காலை உணவு உண்ட அந்த பூங்காவில் மதிய உணவுக்காக ஒன்று கூடினோம்.

எழில் இராவணன், இம்ரான் பாய், தரணி உணவிற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார்கள். அனைத்து உறவுகளும் களமாடிய களைப்பில் உணவு உட்கொண்டார்கள். சிறிது ஓய்வுக்குப் பின் மீண்டும் படை எடுத்தார்கள்.

நாம் நமது பரப்புரைப் பயணத்தை அங்கு முடித்துக்கொண்டோம்.

மீதமிருந்த பத்தாயிரம் ரூபாயை தலைவர் தேவேந்திரன் அவரிடம் கையளிப்பு செய்தோம். புகைப்படம் எடுத்துக்கொண்டு ஆரத்தழுவி விடை பெற்றோம்.

தலைவர் தேவேந்திரன், "என்னோட ஆயுள் முடியும் முன்பே இன்னொரு தலைமுறையை உருவாக்கி பொறுப்பை கடத்திவிட்டோம்னா எனக்கு அது போதும் அவங்க இதைவிட வீரியமாக முன்னெடுத்து செல்வார்கள்" என்றார்.

நெக்குருகி போனோம்.

கொள்கை பரப்புச் செயலாளர் தரணி அவர்களையும் அண்ணன் எழில் ராவணன் மனதார பாராட்டி உற்சாகமூட்டி நாங்கள் பிரிந்தோம்.

இருசக்கர வாகனங்களில் வந்திருந்த உறவுகள் சென்னை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினர். நான்கு சக்கர வாகனங்களில் வந்திருந்த உறவுகள், வெள்ளைகுட்டை என்ற ஊரில் நடைபெற்ற தெருமுனைப் பிரச்சாரத்தில் கலந்து கொண்டுவிட்டு கிளம்பினர்.

முன்னாள் இன்னாள் ஆட்சியாளர்கள் வருவதாகக் கூறி வாணியம்பாடி தொடங்கி சென்னை வரை ஆங்காங்கே தேசிய நெடுஞ்சாலையில் காவலர்கள் நிறுத்தப்பட்டு இருந்தார்கள்.

ஒரு மணிநேர பயணத்திற்குப்பின் சிறு ஓய்விற்காக தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்களை நிறுத்தினோம் நிறுத்தும் பொழுது ஒரு பெண் காவலரும் சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்தார்.

பொருளாளர் சஞ்சய் அவர்கள் குடிநீரை எடுத்து தற்செயலாக திரும்பிப் பார்க்கையில் அந்தப் பெண் காவலர் நீர் கேட்கலாமா வேண்டாமா

எனத் தயக்கத்துடன் வந்தார்

தம்பி சஞ்சய் அவர்களும் ஒரு கணத்தில் அக்கா தண்ணி வேணுமா அப்படின்னு கேட்க உடனே தம்பி குடுங்கனு சொல்லி தாகம் தீர்த்துக் கொண்டார்கள். அந்த காட்டில் தேசிய நெடுஞ்சாலையில் குடிக்க தண்ணீர் கூட இல்லாமல் அந்த பெண் காவலர் படும் வேதனையை நினைத்து கவலையாக இருந்தது. ஒரு வழியாக காஞ்சிபுரம் வந்தடைந்து ஸ்ரீபெரும்புதூரில் மீண்டும் சந்தித்தோம்.

மகிழுந்தில் வெள்ளைகுட்டை பிரச்சாரத்திற்கு சென்று தாமதமாக கிளம்பிய உறவுகளும் இணைந்து கொண்டார்கள்.

பயணம் இனிதே நிறைவானது. களைப்போடு வீடு வந்து சேர்ந்த அந்த தருணத்தில் தேசியராஜ் அவர்கள் ஒரு ஆறுதல் அளித்தார். வெற்றியோ தோல்வியோ அதை விட முக்கியம் புரட்சி விதைகளை வீதிவீதியாக விதைத்துவிட்டு வந்திருக்கிறோம் என்றார். அது போலவே நாங்கள் விதைத்தவை வருங்காலத்தில் விருட்சமாய் எழுந்து நிற்கும்.

தமிழர்கள், பல்லாயிரக்கணக்கில் பல லட்சத்தில் தகவல் தொழில்நுட்ப பணியாளர்களாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழுணர்வோடு சில நூறு நபர்களே இந்த பிரிவில் இணைந்திருக்கிறோம். நமது பிரிவில் இணைந்திருந்த சிலநூறு பேரில் 19 பேர் மட்டுமே இந்த களப்பணிக்கு கலந்து கொண்டது வருத்தம்தான்.

பலருக்கு பல சூழ்நிலைகள் இருந்தாலும் எதிர்வரும் காலங்களில் நமக்கான தமிழ் தேசியத்தை வளர்த்தெடுக்க காலம் கையளித்த கடைசி கையிருப்பு நமது கட்சியை முன் நகர்த்திச் செல்ல வீதி வீதியாய் கொண்டு சேர்க்க ஒவ்வொருவருக்கும் கடமை இருக்கிறது.

அதை நிறைவேற்றுவோம் எதிர்வரும் காலங்களிலும் இது போன்ற பயணங்களிலும் நாம் நிச்சயமாக பங்கு கொள்ள வேண்டும் கொள்வோம்.

பெரும் ஆதரவாய் பொருளாதார பங்களிப்பு நல்கிய அனைவருக்கும் நமது குழு சார்பாக நன்றிகள்.

கடுமையான பொருளாதார சூழ்நிலை நெருக்கடிகள் ஒருபுறம் இருந்தாலும் இந்த பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி திட்டமிட்டு செய்து முடித்த நமது தலைமைக்குழு உறுப்பினர்கள் அண்ணன் மதுசூதனன், சரவணன், பொருளாளர் சஞ்சய் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளும் புரட்சி வாழ்த்துக்களும்.

"விதைப்புக்கான பருவமே இது

விதைத்தது விளைந்தது.

சில முளைத்து வருகிறது - இன்னும் பல விதைக்கப்படும் - விளையுமென்ற பெரும் நம்பிக்கையில்

ஆம் நாங்கள் விதைத்து விட்டோம். விதைக்கவே எங்களிடம் புரட்சி விதைகள் இன்னும் ஏராளம் மிச்சமிருக்கிறது..."

- வீரம்மா செல்லமகன்



"நாளை ஒரு களப்பணி வீதிக்கு வா தமிழா."

ஒரு வழியாக இடைத் தேர்தலா அல்லது பொதுத் தேர்தலா என குழப்பத்திலேயே வேலூர் தேர்தல் முடிந்துவிட்டது. வெறும் 8000 வாக்கு வித்தியாசத்தில், திமுக வின் அடுத்த வாரிசு பதவிக்கு வந்தாகிவிட்டது. வென்றவருக்கு வாழ்த்துகள்.

புரட்சி, மய்யம் என பேசியவர்கள் எல்லாம் ஒதுங்கிக்கொள்ள, மக்களை சந்திக்க மற்றுமொரு சந்தர்ப்பம் என நாம் களத்தில் இறங்கினோம்.

கடுமையான பொருளாதார நெருக்கடியுடனே இத்தேர்தலை நாம் சந்தித்துள்ளோம். பிடிபட்டவரும் பிடித்தவரும் இருக்க, பாதிக்கப்பட்டது என்னமோ நாம் தான். இருமுறை செலவாகிப்போனது
நாம் 27000 வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளோம். இது, நாம் கடந்த தேர்தலில் பெற்றதை விட ஐந்து மடங்கு அதிகம். தமிழகத்தில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத்துள்ளதை இது காட்டுகிறது. இருபெரும் கட்சிகளின் கடுமையான பணப்பட்டுவாடாவுக்கும் இடையே இத்தனை மக்கள் நமக்கு அளித்துள்ளது, மக்கள் மாற்றத்திற்கு தயாராகிவிட்டார்கள் என்பதையே காட்டுகிறது.




"நாம் அரசியல்வாதிகள் அல்ல . .புரட்சியாளர்கள்"

பொதுவாக, பரப்புரைக்குப்பின் தான் தேர்தல் நடக்கும் ஆனால் ., நமக்கோ தேர்தலுக்குப்பின் தான் பரப்புரையே தொடங்குகிறது .

சகோதரி தீபலட்சுமி அவர்கள் 26995 வாக்குகளை விதைகளாக , மரங்களாக நடும் பணியைத் தொடங்கிவிட்டார்.

வெற்றிபெற்றதோடு தொகுதியை மறக்கும் வேட்பாளர்கள் இருக்க , தேர்தல் முடிந்ததும் மக்கள் பணியில் இறங்கும் உள்ளம் , தம் மண்ணையும் மக்களையும் நேசிப்பவர்க்கே இருக்கும்நாம் தமிழர் வேட்பாளர்களிடம் மட்டுமே இருக்கும் .

தேர்தல் என்பது நமக்கு ஒரு பகுதி தான்.


- அறிவரன் பா




நாம் தமிழர் கட்சி









## மாதாந்திர கலந்தாய்வு | ஆகத்து 2019

18 ஆகத்து அன்று நடைபெற்ற கலந்தாய்வில் கடந்த வேலூர் பாராளுமன்ற தேர்தல் குறித்தும், செப்டம்பர் 01-ல் தஞ்சாவூரில் நடைபெற உள்ள அருள்மொழிவர்மனுக்கு (ராச ராச சோழன்) நமது கட்சியின் சார்பில் நடத்தும் நிகழ்வு குறித்தும் மற்றும் இப்பிரிவின் அடுத்த கட்ட திட்டங்கள் & இப்பிரிவிற்கான உறுப்பினர் சேர்க்கை குறித்தும் விவாதிக்கபட்டது.

